அனுமந்தபுரம்

அருட்கவி ஸ்ரீ காளிதாசர்

இயற்றிய

# பெருவெளி போதம்

சோதிலிங்க மாலை

ஐந்தாம் ஆண்டு சித்திரைப் பெருவிழா
நினைவு வெளியீடு

வெளியிடுவோர்:

அருள்ஞானப் பெருவெளி

நடராசபுரம், புக்கத்துறை அஞ்சல்

மதுராந்தகம் வட்டம், செங்கற்பட்டு மாவட்டம்

ஓம்

# அணிந்துரை

வாழ்வியற் புலவர்

**தவத்திரு. சொ. ர. தேமொழியார்**

திருத்தொண்டர், நிறுவனர், அருள்ஞானப் பெருவெளி

பெருவெளி போதம், பத்துத் தலைப்புக்கள் உடையது. குறட்பாவால் அமைந்தது; நூறு குறளைத் தன்னகத் தேகொண்டது.

கருத்துக்கள் தெளிவாக உள்ளது; இனிய தமிழில் அமைந்தது. முன்னோர் மொழிந்த கருத்தினைத்தன்னகத்தே கொண்டது.

எண்ணுவார் எண்ணத்தை மலரச் செய்வது பொருள்பொதிந்தது உணர்வார் உளத்து ஊற்றாய் அமைந்தது. அமைதியை அளிக்கும் விளக்கமாய் விளங்குவது.

அதோடு "சோதிலிங்க மாலை" என்னும் பதிகமும் ஆசிரியர் அவர்களால் தரப்பட்டுள்ளது. பயில்வோர் பக்குவம் அதை அறியும்.

இந்நூலின் ஆசிரியர் திரு. அருட்கவி காளிதாசர் அவர்கள் கற்றவர், கனிவான மனமுள்ளவர். பெருவெளியை அணுகும் பேறு உற்றவர். முன்னமே "திருநெறி" என்னும் தலைப்பின் கீழ் பல பதிகப் பாமாலைகள் பாடிப் பரவிய நல்லன்பர்.

நீடுக நன்னெறி; நிலவுக அருட்பா.

ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம்

அனுமந்தபுரம்

**அருட்கவி ஸ்ரீ காளிதாசர்**

இயற்றிய

# பெருவெளி போதம்

ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம்

# 1. திருவடி

1 பத்தி குறியருள் அன்பு கலைஞானம்
அத்தி அடிபரவும் ஆறு

2 திருவளர் தாமரை என்ப திருத்தாள்
குருவரர் காட்டும் குறி

3. பற்றொன்றில் லாப்பரன் தாளொன்றே பற்றுக
மற்றொன்றும் வேண்டுவ தில்

4. மறைமுடி வேந்தும் மரைப்பதத் தோறும்
பிறைமுடிப் பெம்மான் புகழ்.

5. பொறிவாய்ப் படுவினை ஐந்தவியப் பொற்றாள்
நெறிவாய்ப் படுவினை நேர்

6. வெட்டத் தளிர்க்கும் வினைத்தரு கட்டற
வித்தகன் தாளை விரும்பு.

7. வாளை நிகர்த்த வினையற வேறில்லை
தாளைத் தொழுதல் தவிர்த்து

8. இடுக்கண் புலனால் அடுக்கும் பொழுதஃ(து)
ஒடுக்கும் ஒளிபதம் ஓர்.

9. கரைதனைக் காணா கலம்போற் கலங்கும்
மரைப்பதங் காணா மனம்.

10 அருணன் ஒளிசெய் அளப்பினரி தாகும்
திருவடித் தாமரையே

# 2. உயிர்

11 இணர்த்தாள் இறையவன் எவ்வகை யானும்
உணர்த்தா துணரா துயிர்.

12 தனுகரணம் போகம் புவனமிவை நான்கும்
அனுபவம் ஆகும் உயிர்க்கு.

13 பிறப்பொக்கும் ஆவியெல் லாம்குணம் மூன்றால்
சிறப்பெய்தும் சீர்மை சிவம்

14 இணையீர் திருத்தாள் புணரா திழியும்
உணராது தன்னை உயிர்

15 ஆசை வயப்பட் டலமந் தழியுமுயிர்
ஈசன் திருத்தாள் இகழ்ந்து

16 எண்ணரிய வான்மாக்கள் விண்ணினும் மண்
அண்ணரிய நண்ணும் அவை ணினும்

17 அரவும் உரியும் அனையதுயிர் கூட்டுள்
கரவுகொள் காலக் கணக்கு

18 நெய்யிலாத் தீபம் ஒளிர்தலில் போலுமே
மெய்யிடைக் கூத்தனில் ஆன்.

19 பந்தமு றான்மா வலைப்படு மீனொக்கும்
அந்தக னாஞ்சேர்ப் பனுக்கு.

20 உயிர் உணர் வூடுறும் உத்தமன் தாளால்
துயில்எழும் துன்பந் துடைத்து.

## 3. முனைப்பு

21 முனைப்பொரு நாளும் முதல்வனைக் காட்டா
தினைப்பொழு தேனும் திரிந்து

22 அளவுடை ஆன்மா அளப்பிலா தானை
அளவிடல் ஆணவம் ஆம்.

23 முனைப்பை முறிக்க முயலா வுயிர்தாம்
முனைப்பால் முயங்கும் முனைந்து.

24 செம்பிற் களிம்பனைய தாவிகொள் ஆணவம்
பம்பிற் பறைக்கும் பரம்

25 முக்குணத்துள் மிக்கதன் பண்பே முனைத்திடும்
பக்குவத்தின் பாலாம் பரிசு

26 எரிசூழத் தோன்றும் எறும்பனையர் பாசம்
பரியத் திகழ்வார் பரந்து.

27 காமக்கண் ணார்தாம் கருவுற் றழிவர்மற்(று)
ஏமக்கண் ணார்க்கிடர் ஏது?

28 சினைமுகில் நீங்கு நிலவனையர் சித்தம்
முனைப்பற நின்றார் முயன்று.

29 வினைப்பயன் நீங்கி முனைப்பொழிந்த ஆன்மா
சினைப்புகா தெய்துந்தற் சீர்

30 கதிரொளிமுன் காய்புழுப் போலாம் கருணைப்
பதியொளிமுன் பாசத் தனை.

## 4. கன்மம்

31 ஊனாய்ப் பிறவுடல் உண்பார் உடலுண்ண
ஊனாய்ப் பிறர்க்களிக்கும் ஊழ்

32 முன்னை வினையாவும் பின்னை விளைவாகி
மன்னும் உயிர்கொள் மலத்து

33 இருள்மனத் தீனர் இயற்றுவர் இன்னா
வெருள்வினை யாண்டும் விழைந்து

34 புனலூறப் புல்முளைத்தல் போலுமே பாச
வினையூறத் தோன்றும் பிறப்பு

35 காற்றால் நலம்தீ துறல்போல் மனந்திகழ்
ஆற்றும் இருவினைக் கூறு

36 அகமகிழ் வில்லார் அடைந்தவர்பாற் கொள்ளார்
முகமன் மலரும் மொழி

37 சீயமெனச் சீறும் சினம்மாயும் சிந்தையுள்
மேயவன் மென்றாள் உறின்

38 வெவ்வினை செவ்வினை எவ்வினை அவ்வினை
வவ்வினர் வாக்கான் வரும்

39 ஞானக்கண் நோக்கின் உறுபொருள் ஊழியதாம்
வானக்கண் வாய்ப்ப வளம்

40 சிந்தைசிற் றம்பலஞ் சேரின் சிவமாகும்
முந்தை வினையை முறித்து.

## 5. மயல்

41 எண்ணுவார் எண்ணத்தில் இல்லாதான் என்
உள்ளுவார் உள்ளத் துளன் [றென்றும்

42 நீரிற் புலனுங் குமிழி யனையன
தேரின் அகலும் மயல்.

43 மருளுறும் மான்போல் மயங்குவர் மண்ணில்
இருளுறும் எண்ணத் தவர்

44 மதியுறு வார்க்கில தாகும் மறுவார்
விதியுறு மம்மர் விரைந்து

45 பூதங்கள் ஐந்துணைப் பொன்று உயிர் மயங்கி
ஏதங்கள் எய்தும் இயைந்து

46 அறிவார் விளக்கால் அறிவார் மயலை
அறியார் அஃதறியார் ஆய்ந்து

47 புலனால் உயிருறும் மாயம்அகலும்
புலனைந் தொருங்கும் பொழுது

48 மண்ணுறும் ஆன்மா மயங்குறும் வானுறற்(கு)
எண்ணுரு தேங்கும் பொழுது

49 விண்மீன் இலையென்பர்போல்வர் பகற்போதின்
கண்மூன் றுணரா தவர்

50 மதியினை மஞ்சு மறைத்தல்போல் ஆகும்
பதியினைப் பாசம் படர்ந்து

## 6. நெறி

51. சிவபரச் சின்னம் சிறுநெறி தீய்த்துச்
சிவநெறிக் குய்க்கும் சிறந்து

52. தீயினைத் தீயினால் தீய்த்தலில் போலுமே
நோயினை நோயினால் அடல்

53. பதிபசு பாசமாம் மூன்றும் அனந்தம்
விதியிதை மாற்றல் அரிது

54. கூற்று வருமுனம் கூத்தன் தளியுளத்
தேற்றுக ஞான விளக்கு

55. செப்பருந்தூய்மைச் செறிவுடையார் தாமுணர்வர்
மூப்பொருள் வாய்மை முறை

56. தீக்கை யிலராய்த் திருநீ றணியாதார்
ஆக்கை அழியும் அயர்ந்து

57. சிற்றறி வான்மாவும் சிற்றம் பலந்தொழுதால்
முற்றறி வாகும் முயன்று

58. பிறந்தா ரெனின்தான் பிறர்க்காம் உதவி
பிறழா தியற்றல் பெரிது

59. ஆணவம் கன்மம் மயல்மூன்றும் ஆரியன்
மாணடியான் நிங்கும் மறைந்து

60. எவ்வடிவத் தானும் குருவுப தேசிப்பன்
அவ்வடிவத் தானும் அவன்

# 7 தொண்டு

61. விடையுரு தொண்டென் பதியா தெனிற்சீர்
இடையுரு நல்லோர் நடை

62. ஐம்பொறிக் காட்சிக்கும் அப்பால் விளங்கிடும்
பைம்பொனூர் பூம்பதம் போற்று

63, தீதறு தெய்வத்திருவுறுந் தாயென்க
மாதரைக் காணும் மனத்து

64. அரசிவ பத்தியாங் காற்றின் எரியும்
பரமூணர் ஞான விளக்கு

65, பழுத்தது போலழுகு வெம்பல் புரைய
வழுத்திடும் வஞ்சகர் தொண்டு

66. அருளுணர் வாகும் அடியவர் தம்மைத்
தெருளுணர் வாட்கொளும் தேர்ந்து

67. கருத்தினிற் கள்ளக் குணமுடையார்க் கில்லை
திருத்தகு தெய்வத் தெளிவு

68. குருவளர் ஞானம் குறித்தவர் காண்பர்
மருவளர் பொற்றுள் மகிழ்ந்து

69. ஒளியெவர் உள்ளத் தெழுமோ அவர்தாம்
களியுறக் காண்பார் கழல்

70. காஞ்சிரங் கற்பக மாதல் கழல்பணிவார்க்
காஞ்சிவத் தொண்டின் கனிந்து

## 8. அருள்

71 அவன்தாள் வணங்கல் அவனருளால் அன்றி
எவர்செயலால் ஆவதும் இல்

72 முனைவன்றன் ஊட்டின் னருளின்றி நீங்கா
வினையென்றும் ஆவி விடுத்து

73 மலபரி பாகத் திருவினை யொப்பால்
இலகிடுஞ் சத்தினிபா தம்

74 நூலுறை நுட்பம் நுவலா துணர்த்துமென்
ஆலுறை அண்ணல் அறி

75 ஐந்தெழுத் தோதி யருளுற்றார்க் கன்றிமுகம்
ஐந்துணர்தல் ஆர்க்கும் அரிது

76 ஈயென் றுநவர்பால் ஏங்கிலர்க் கீந்தருள்வன்
தாயென் பவர்க்கவனே தாய்

77 அடலுறும் கூற்றும் உடலுறும் ஐவர்தமை
அட்டும் அவன்தாள் அருள்

78 புவியைப் புனல்கரைத்தல் போலாம் புலன்கள்
அவியப் பதியருளல் ஆண்டு

79 அறியும் அறிவை அரனே அருள்வன்
அறிவாய் அனைத்துள் அமைந்து

80 ஐந்தொழில் அம்பலவன் ஆற்றும் கருணைமலம்
நைந்துயிர் உய்யும் பொருட்டு

# 9. பேறு

81 அறிவார் அகத்தை அணிகழலின் ஆள்வன்
அறிவாய் அவனே அமைந்து

82. வாசக் கமலவடி ஈசன் அருளும்நாள்
பாசத் தளையகலுங் கால்

83. பிறந்தவை யாவும் இறந்தவை யாகும்
சிறந்தவை தாளுறும் சீர்

84. அரியயன் காணார் அரியவற்றுள் எல்லாம்
பெரியதாம் பொன்னடிப் பேறு

85. மலஞ்சார்ந் துயிர்தாம் மயங்கும் மலர்த்தாட்
கலஞ்சார்ந் தவைக்காம் கரை

86. கொண்டார் முகத்து விழியிரண் டென்பர்தாம்
கண்டார் கமல பதம்

87. அந்திமக்கால் புந்திகொள் பாங்காம் பிறப்பஃதும்
அந்திவண்ணன் தாளால் அறும்

88. ஒலிக்கும் கழலிணை ஓர்ந்தார் உவப்பின்
களிக்கும் களியும் கெடும்

89. அன்புசிவம் என்பார் அகத்தவன் தாளுறுவார்
இன்பநிலை ஏத்தும் உலகு

90. மாசில் மனத்துள் மலரடி மன்னுறும்
பேசில் பிறிதில்லை பேறு

## 10 பதிநிலை

91. அஞ்செழுத் தோதி அமைபவர்க் கென்ஞான்றும்
நெஞ்செழும் நாதம் நெகிழ்ந்து

92. உருவத் திருவை உணர்ந்தவர்க் கல்லால்
அருவத் தமைதல் அரிது

93. கறைமிடற்றார்க் கன்பு கருதுவார் தம்மை
இறைவனென் றெண்ணல் இயல்பு

94. புண்ணிய ராவர் புரிசடையோன்புகழ்
நண்ணிய நல்லோர் நலத்து

95. நாதம் நனியுறும் வேதம் நயத்துடன்
ஓதும் உணர்வுள் உவந்து

96. ஒருங்கிய வுள்ளத் துணர்வுடையார்க் கில்லை
நெருங்கிய பாசக் கயிறு

97. பெருகிய பண்பாற்பொலிவுடையார் காண்பர்
உருகிய உள்ளத் துயர்ந்து

98. இறக்கப் பிறக்கும் இழிவிலர்தம் சிந்தை
சிறக்கச் செழிக்கும் சிவம்

99. விந்தொடு நாதம் விளங்குறக் காண்பர்
சிந்தையுள் வாழுஞ் சிவம்

100. சும்மா விருந்து சுகம்பெறு வாருளத்துச்
செம்மாந் திருக்கும் சிவம்

அருட்கவி காளிதாசர்

இயற்றிய

# சோதிலிங்க மாலை

(கட்டளைக் கலித்துறை)

தென்முகத் தேசிகத் தெய்வநன் ஞானில் தெருளுறவே
சின்வரை மன்றிற் சுடரெனத் தோன்றிய சோதிலிங்கம்
மன்னுற மீட்டுமெஞ் சித்த வியோமத்துள் என்றுறுமோ?
இன்னுரை யீந்தருள் இன்பத் திலங்கும் இறையவனே! 1

அரிய வொளிகொள்விளக்காய் விளங்கும் அதிசயமாய்த்
துரிய வெளியிற் சுடரெனத் தோன்றிய சோதிலிங்கம்
பரிய வரவியோ மத்துள் பளிங்கென மீண்டுறுமோ?
தெரிய அருளுக தென்றில்லைத் தெய்வ நடத்தரசே! 2

திருவா சகப்போற் றியகவல் ஏத்தத் திளைத்துவந்து
புருவ வெளியிற் சுடரெனத் தோன்றிய சோதிலிங்கம்
அருவ வுருவாய் அகவியோ மத்திடை மீண்டுறுமோ?
அருளாய் அணியம் பலவ விளங்க அடியனுக்கே! 3

அம்பொற்சித் தார்த்தி அவிட்டத் தசமி இடபவெள்ளி
சிம்மக் குருசேய் சனிராகு மீன புதனிரவி
செம்மை மகர மதிநாள் துரியத்தாஞ் சோதிலிங்கம்
உம்பர் மணிமீண்டும் உள்ளவி யோமத் துவந்தருளே! 4

அத்தத் திலங்கிய தத்துவம் ஆயுங்கால்! அற்புதமாய்
சுத்த வெளியிற் சுடரெனத் தோன்றிய சோதிலிங்கம்
சித்த வியோமஞ் சிறக்கவே மீட்டுறல் என்றுளவோ?
நித்தம் அருளாய் நிமல நிலேமணி நித்திலமே! 5

புந்தியுட் போதமாய்ப் பொன்னுய்ப் புகுந்து புறமறுத்துச்
சுந்தர காந்திச் சுடரெனத் தோன்றிய சோதிலிங்கம்
எந்தமை யாண்டிட மீட்டுமெஞ் சிந்தையுள் என்றுறுமோ?
வந்தெமை வாழ்த்த உளம்புகும் உள்குவார்க் குத்தமனே. 6

பொழுதெலாம் தற்கே யெனப்பிணித் தீர்த்தெம் உளம்புகுந்து
சுழுமுனை தன்னிற் சுடரெனத் தோன்றிய சோதிலிங்கம்
எழுமுறை எம்முளத் தென்றுள மீளவே என்றழுதுத்
தொழுதனன் துன்பந் துகளாய்த் துடைத்தருள் தூயவனே! 7

ஆக்கமோ டைந்தொழில் ஆற்றவல் லானந்தத் தம்பலவா,
சூக்குமந் தன்னிற் சுடரெனத் தோன்றிய தோதிலிங்கம்
பூக்குமோ மீட்டுமெம் புந்தி பொலிந்துறு பூரணமாய்?
ஏக்கமும் ஏகுமா றேழைசொல் இன்றமிழ் ஏற்றருளே! 8

அயன்மால் அறியா தொளித்துவந் தென்னுள் அரசுகொண்டு
சுயம்பாய் விளங்கு சுடரெனத் தோன்றிய சோதிலிங்கம்
வயமாய் அடுத்தடுத் தென்று வருமோ வனசமுற
நயமாய்ப் பணிந்தனன் நின்பால் நடராச பூபதியே 9

பண்ணிசைப் பைந்தமிழ்ப் பாடல் பருகியென் உள்ளகத்தே
சுண்ணவெண் ணீற்றுச் சுடரெனத் தோன்றிய சோதிலிங்கம்
வண்ணமவ் வண்ணமாய்வாய்க்குநாள் என்றுள வாரிசம்வாழ்
பண்ணவ! பாவலங் கார! பணிந்தேன் பரிந்தருளே! 10

காளிதாஸ் பிரஸ், ...